**தலைப்பு – 123 – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பொழிப்பு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 நவம்பர் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இந்த நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்..

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக, எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது..

1.5 **ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1** நிதிக்கூற்றுக்களுக்கு தொடர்புடைய மூலதன செலவினங்களை கணக்கிடும் போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | **கணக்கீட்டு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | அமைச்சினால், ஏனைய மூலதன செலவினங்களின் கீழ் உள்கட்டமைப்பு அபிவிருத்தி செலவின விடயம் (2506) ஊடாக 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 15,718,376,572 ஆன தொகை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும் அச் செலவுகளை ஏற்றதன் ஊடாக எழுந்த சொத்துக்கள் அல்லது நடைமுறையிலுள்ள வேலைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திறைச்சேரியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு அமைப்பினுள், இது தொடர்பாக வெளிப்படுத்தும் வசதி வழங்கப்படவில்லை. | மூலதன செலவினங்கள் ஏற்பதன் ஊடாக எழுகின்ற சொத்துக்கள் அல்லது நடைமுறையிலுள்ள வேலைகள் தொடர்பாக அடையாப்படுத்துவதற்கு முறைமையொன்று அடையாளப்படுத்தப்படல் வேண்டும். |
| **(ஆ)** | அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வாகன பட்டியலின் பிரகாரம் அமைச்சிற்கு உரித்துடையதாக 10 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 94,325,880 ஆக காணப்பட்டது. எனினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வருடாந்த நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த வாகனங்களின் பெறுமதி ரூபா 47,595,880 ஆக, அதாவது ரூபா 46,730,000 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். 2022 ஏப்ரல் கணக்கு பொழிப்பு ஊடாக சீர் செய்யப்பட்டுள்ளது. | அமைச்சிற்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பான சரியான தகவல்கள் வருடாந்த கணக்கு அறிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன

| | கணக்கீட்டு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 454 (1) பிரகாரம், அமைச்சின் கீழுள்ள 11 அலுவலகங்களில் பொருட்பதிவேடுப் புத்தகம் மற்றும் நுகர்வுப் பொருட்கள் புத்தகம் பேணிச் செல்லப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்குவதற்கு கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம் பொருட்பதிவேடு புத்தகம் மற்றும் நுகர்வுப் பொருட்கள் புத்தகம் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் அமைச்சினால் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு அப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் அனைத்து பொறுப்புக்களும் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (iii) | அரசாங்க பெறுகைகள் வழிக்காட்டிக் கோவையின் 5.4.4 பிரகாரம் பணி தொடக்க முற்பண பதிவேடான்று அமைச்சினால் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணி தொடக்க முற்பண பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பணி தொடக்க முற்பணம் குறிப்பிடுவதற்காக பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மீண்டெழும் செலவின விடயங்களின் மொத்தம் ரூபா 151,500,000 ஆன நிதியேற்பாடு மற்றும் 4 மூலதன செலவின விடயங்களின் மொத்தம் ரூபா 1,800,000 ஆன நிதியேற்பாடு முழுமையாக (100%) சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணம் 50 (ii) பிரகாரம் மதிப்பீடுகள் முடிந்த வரையில் முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். |
| (ஆ) | 123-02-07-08-2506-17 ஆம் இலக்க செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 925,000,000 ஆன தொகை 123-02-07-19-2506-17 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு நி.பி 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த போதிலும் அம் முழுமையான தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | -மேற்படி- |
| (இ) | 27 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 166,076,000 ஆன மற்றும் 09 மூலதன செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 16,116,332,328 ஆன தொகையில், ஒவ்வொரு செலவின விடயங்களின் ஒதுக்கங்களில் 20% - 88% இடையேயான வீச்சில் மீண்டெழும் ஒதுக்கத்தில் ரூபா 68,814,855 மற்றும் மூலதன ஒதுக்கத்தில் ரூபா 6,486,137,796 ஆக மொத்தம் ரூபா 6,554,952,651 சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | -மேற்படி- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 955,000,000 ஆன ஒதுக்க எல்லையை மிகைத்து ரூபா 24,161,225 ஆன பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. | இது அனைத்து ஆண்டுகளிலும் இடம் பெறுகின்ற சாதாரண செயன்முறையாகும். | 2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் பொறுப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் 123-02-07-29-2506(11) ஆம் இலக்க (நகர மீளுருவாக்கல் செயற்திட்டம்) செலவின விடயத்திற்காக ரூபா 1,177,472,025 ஆன பொறுப்புபொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறித்த பொறுப்பு இறுதி கணக்கு தொகுப்பில் குறிப்பு **III** இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | ஆண்டினுள் உட்படுகின்ற அனைத்து பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 101 (1) மற்றும் 104 (4) ஆம் பந்தி | நட்டச் சேதங்கள் ஏற்பட்டு மூன்று மாதங்களினுள் முழுமையான பரிசோதனையொன்று மேற்கொண்டு பின்னர் நட்ட சேதத்தின் பெறுமதியாகிய ரூபா 6,390,000 ஆன தொகை மற்றும் பொறுப்பு கூற வேண்டியவர்கள் உறுதி செய்துக் கொண்டு நட்ட சேதத்தினை பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எனினும் PH 0894 ஆம் இலக்க வாகனம் 2020 செப்தெம்பர் 06 ஆம் திகதி விபத்தொன்றிற்கு உட்பட்டமையினால் முழுமையாக சேதமடைந்திருந்த போதிலும் அச் சேதத்தினை பூரணப்படுத்திற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் விபத்து நேரிட்டு 1 ½ ஆண்டுகள் கடந்திருப்பினும் நி.பி பிரகாரம் இறுதி பரிசோதனை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் முழுமையான பரரிசோதனை அறிக்கை பெறப்பட்ட பின்னர் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | கொழும்பு நீர்நிலை நீர்பிடிப்புப் பகுதியில் வெள்ளத்தினை குறைத்தல், கொழும்பு பெருநகர் பகுதியில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆற்றலை வலுப்படுத்தல், கொழும்பு நகரத்தினை அலங்கரித்தல் போன்றவற்றினை நோக்காக கொண்டு கொழும்பு பெருநகர் அபிவிருத்தி செயற்திட்டம் 2017 யூன் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டு 2012 யூலை 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 யூன் 30 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக கடன் வழங்கும் முகவர் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு குறிக்கப்பட்டிருந்த ரூபா 27,890.22 மில்லியனிற்கு சமனான 213 டொலர்கள் ஆன மொத்த தொகையில் 90 சதவீதத்தினை பிரநிதித்துவப்படுத்தும் ரூபா 31,079 மில்லியன் ,அதாவது 191.68 டொலர்கள் மற்றும் அரசின் நிதியேற்பாட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 14,141.52 மில்லியனான மொத்த நிதியேற்பாட்டில் 60.8 சதவீதத்தினை பிரநிதித்துவப்படுத்தும் ரூபா 8,368 மில்லியனிற்கு சனமான 69.2 டொலர்கள் மட்டும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும், 2013 திசெம்பர் மாதத்தில் ரூபா 27.22 மில்லியன் செலவில் பம்பலப்பிடியவில் மற்றும் கொள்ளுபிடியவில் பாதசாரி மேல்நிலைப் பாலம் **(pedestrian overhead bridge)** திட்டமிடல் மற்றும் நிர்மாணிப்பு மேற்பார்வைக்காக 02 மதியுரை சேவைகள் ஒப்பந்தங்கள் ரூபா 27.22 மில்லியன் பெறுமதிக்கு 2013 திசெம்பர் மாதத்தில் மதியுரை கம்பனியொன்றிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அது 10 வாரங்களுக்குள் நிறைவு செய்வதற்கு உடன்பாடு காணப்பட்ட போதிலும் செயற்திட்டத்தினால் அதை நிறுத்துமாறு 2016 மே 23 ஆந் திகதி மதியுரை கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அத் தகவலை மதியுரையாளருக்கு உரிய நேரத்தில் தெரிவிக்காமையின் காரணத்தினால் நடுவர் நியாயச் சபையின் ஆலோசனையின் பிரகாரம் மதியுரைக் கட்டணமாக ரூபா 21.79 மில்லியன் ஆன தொகை குறித்த மதியுரை கம்பனிக்கு கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்திருந்ததுடன் அது சிக்கனமற்ற செலவாக காணப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ள நபர்களுக்காக கொடுப்பனவு உள்ளடங்கலாக செயற்படுத்தப்பட்ட அனைத்து பணிகளுக்காகவும் மதியுரையாளர்களினால் மதியுரை கட்டணம் கோரப்பட்டிருந்தது. நடுவர் மன்ற செயன்முறை ஊடாக இறுதியில் விடயம் தீர்க்கப்பட்டிருந்ததுடன் நடுவர் மன்ற தீர்ப்பின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய நேரிட்டது. | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை உயர் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ( ஆ) | கடன் வழங்கும் முகவர் நிறுவனத்தினால் ஒதுக்கப்பட்ட ரூபா 1,064.79 மில்லியனிற்கு சமனான 5.27 ஐ.அ.டொலர்கள் ஆன முழு நிதியில் நகர செயற்திட்டங்கள் தயாரிக்கும் செயற்திட்டம் 36 மாதங்களில் நிறைவு செய்யப்படல் வேண்டும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் 33 மாதங்கள் கடந்த பின்னர், அதாவது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கத்தில் 38 சதவீதத்தினை பிரநிதித்துவப்படுத்தும் ரூபா 406.27 மில்லியனிற்கு சமனான 2.07 மில்லியன் ஐ.அ.டொலர்கள் மட்டும் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. கொவிட்ட தொற்று காரணத்தினால் செயற்திட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்துவதற்கு நேரிட்டமை பிரதான காரணமாகும். | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் உயர் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஆகஸ்ட் 18 திகதிய **ER/AB/US/**01(**vol-i)** ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், மேற்படி செயற்திட்டத்தினால் 3 உப செயற்திட்டங்கள் 2020 ஒக்தோபர் 12 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத் திகதி வரையில் அச் செயற்திட்டங்களுக்காக ரூபா 413.36 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2022 யூன் 20 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிராத அடிப்படையில் ஏற்கப்பட்ட மேற்படி செலவினம் விளைவற்ற செலவீனமாக காணப்பட்டது. | செயற்திட்டம் மீண்டும் தொடரப்பட்டுள்ள-மையினால் முன்னாள் மதியுரையாளர்களினால் ஏற்கனவே மேற்கொண்டுள்ள பணிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு புதிய திட்டத்துடன் முன்னோக்கி செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | உப செயற்திட்டங்கள் விரைவில் செயற்படுத்தப்படுவ-தற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2019 யூலை 22 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த நகர மீளுருவாக்கல் செயற்திட்டத்திற்கான உதவி செயற்திட்டத்திற்காக உடன்பட்ட கடன் தொகை 200 மில்லியன் ஐ.அ.டொலர்கள் ஆகும். 2021 திசெம்பர் 31 ஆம் திகதியாகையில் அதில் 16.87 மில்லியன் ஐ.அ.டொலர்கள் மட்டும் செலவிடப்பட்டிருந்தது. கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம், பயன்படுத்தப்படாத கடன் தொகையின் அடிப்படையில் செயற்திட்டத்தினால் கடன் வழங்கும் வங்கிக்கு 0.25 சதவீத அர்ப்பணிப்பு கட்டமொன்று செலுத்தப்படல் வேண்டும். பலவீனமான செயலாற்றலின் காரணத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்காக அர்ப்பணிப்பு கட்டணமாக 0.461 டொலர்கள் அர்ப்பணிப்பு கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றத்தின் பிரகாரம், கடன் தொகை தவணையாக விடுவிக்கப்படுகின்ற-மையினால் ஆண்டு இறுதியில் விடுவிக்கப்படாத கடன் தொகைக்காக அர்ப்பணிப்புக் கட்டணம் செலுத்தல் தவிர்க்கப்பட முடியாது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் உரிய காலத்தினுள் மேற்கொண்டு நாட்டிற்கு ஏற்படுகின்ற நட்டத்தினை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | மேற்படி ஒட்டுமொத்த செயற்திட்டங்களை செயற்படுத்தும் திட்டத்தின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டினுள் 37.5 ஹேக்கர் அளவிலான 04 காணித் துண்டுகள் அபிவிருத்தி செய்வதற்கிருந்த போதிலும் அப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மதியுரையாளரின் சேவை பெற்றுக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட **TOR** இற்காக அமைச்சின் பரிந்துரை மற்றும் **AIIB** வங்கியின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | செயற்படுத்தும் திட்டங்களின் பிரகாரம் காணிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஊ)** | 2020 ஏப்ரல் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 1,723,347,855 ஆன ஒபேசேகரபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் வீடமைப்பு நடவடிக்கைகள் 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தத. எனினும், ஒப்பந்த உடன்படிக்கையின் 15.2.2 பிரிவின் பிரகாரம், 2022 மார்ச் 29 ஆம் திகதி அமைச்சினால் செயலாற்றல் போதுமானதாக இல்லாமையின் காரணத்தினால் ஒப்பந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அவ் ஒப்பந்தக்காரருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பணி தொடக்க முற்பணத்தில் ரூபா 172,334,785 ஆன தொகை 2022 ஒக்தோபர் 06 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முற்பண உத்தரவாத தொகை அறவிடப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் மீண்டும் வழங்கலும் மேற்கொண்டு வருகின்றது. | பணி தொடக்க முற்பணம் முடிந்த வரையில் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(எ)** | செயற்திட்டத்தின் தொழிநுட்ப பிரிவினால் மேற்கொண்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், எபல்வத்த வீடமைப்பு கட்டுமான செயற்திட்டத்தின் 700 வீடமைப்பு அலகுகள் நிர்மாணிப்பதற்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 3,890.00 மில்லியனிற்கு ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2021 சனவரி 26 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டத்திற்காக மதியுரையாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மதியுரையாளர்களின் மேற்பார்வை இன்றி நிர்மாணிப்புக்களின் அடிப்படை பிரதான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை மதியுரையாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள் மீண்டும் சீர் செய்வதற்கு ஒப்பந்தக்காரருக்கு நேர்ந்திருந்தது. இக் காரணத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிடப்பட்ட 35 சதவீத செயன் முன்னேற்றத்திற்கு இணையாக நிர்மாணிப்பு நடவடிக்கைகளின் செயலாற்றலின் உள்ளவாரான செயன் முன்னேற்றம் 22 சதவீதம் மட்டுமாக காணப்பட்டது. | சீர் செய்யும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஏ)** | மேற்படி செயற்திட்டத்தின் வீடமைப்பிற்காக ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யும் பெறுகை செயன் முறையின் போது ஒரு விலைமனுதாரரினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 43,253,577 ஆன தொகை தள்ளுபடியானது ஏல திறப்பு குழுவினால் மற்றும் மீளாய்வு குழுவினால் கருத்திற் கொள்ளப்படாது மிகவும் அதிகமான விமைனு சமர்ப்பித்த விலைமனுதாரருக்கு விலைமனு வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட ஒப்பந்த தொகை மற்றும் தள்ளுபடி குறைக்கப்பட்ட விலை இடையே ரூபா 10,931,910 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. ஏல திறப்பு குழுவினால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமைக்கு காரணங்கள் புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏல திறப்பு குழுவினால் ஒரு மனுதாரரினால் வழங்கப்பட்ட தள்ளுபடி கருத்திற் கொள்ளப்படவில்லை. தேசிய பெறுகைகள் முகவர் நிறுவனத்திடமிருந்து மற்றும் **AIIB** வங்கியிடமிருந்து ஆலோசனை பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்க பெறுகைகள் வழிக்காட்டி கோவையில் உள்ளடக்கப்பட்-டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| **(ஐ)** | பர்கியுசன் வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு பெறுகைகள் கால அட்டவணையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பெறுகைகள் நடவடிக்கை 2019 ஏப்ரல் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி, அதாவது 4 மாதங்களினுள் பூர்த்தி | 2019 ஒக்தோபர் 03 ஆந் திகதி நடைப்பெற்ற SCAPC கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம், | பெறுகைகள் கால அட்டவணை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் விலைமனு வழங்குவதற்கு விலைமனு அழைக்கப்பட்டு 21 மாதங்கள் கடந்திருந்தது. மேலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை வழங்கிய கம்பனியானது உலக வங்கியினால் 2019 யூன் 05 ஆந் திகதி தொடக்கம் 2020 மார்ச் வரை 09 மாதங்களுக்காக தடை செய்யப்பட்டிருந்த நிறுவனமாக காணப்பட்டதுடன் அத் தடை செய்யப்பட்டிருந்த காலப் பகுதியினுள் அக் கம்பனி பதிவின்றி இன்னுமொரு சீனா கம்பனியுடன் புதிய கூட்டு முயற்சி கம்பனியொன்றினை தாபித்து இந்த ஒப்பந்தத்திற்காக விலைமனுவினை சமர்ப்பித்திருந்தது. எனினும் பதிவினை கருத்திற் கொள்ளப்படாது ஒப்பந்தம் குறித்த கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் குறித்த கம்பனி சட்ட ரீதியான கம்பனியொன்றாக பதிவு செய்யப்படுவதற்கு நேர்ந்தமையினால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தாமதமாகல் மற்றும் முற்பண உத்தரவாதம் சமர்ப்பிப்பதற்கு தாமதமாகியமையின் காரணத்தினால், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே ரூபா 400 மற்றும் 12.2 சதவீதத்தினை அடைய முடியாதிருந்ததுடன் அடையப்பட்டிருந்த நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே 0 சதவீதம் மற்றும் 6.5 சதவீதமாக மட்டும் காணப்பட்டது. | பர்கியுசன் வீதி வீடமைப்பு செயற்திட்டத்திற்காக திருத்தப்பட்ட பெறுகைகள் கால அட்டவணை சமர்ப்பிக்குமாறு பெறுகைகள் நிறுவனத்திற்கு தெளிவாக ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டினுள் நிலவிய கொவிட் தொற்று காரணத்தினால் மூலப்பொருட்கள் மற்றும் மனிதவளம் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட கடினத்தினால் இந்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது. | வேண்டும். |
| **(ஒ)** | மேற்படி செயற்திட்டத்தின் வீடமைப்பு செயற்திட்டங்கள் 03 இற்கான சுற்றாடல் ஆலோசனை குழுவின் அங்கீகாரம், 05 வீடமைப்பு செயற்திட்டங்களுக்கான கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு தேவையான **CMA** அங்கீகாரம் மற்றும் 04 வீடமைப்பு செயற்திட்டங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தான கட்டிட அங்கீகாரம் 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வெவ்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்கள் தொடர்புடைய ஒப்பந்தக்காரர்களிட-மிருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். | குறித்த அங்கீகாரங்கள் விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஓ)** | 2014 மே 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதி, அதாவது 5 ½ ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த மூலோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டம் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் 7 ½ ஆண்டுகளின் பின்னரும், அதாவது மீளாய்வாண்டு இறுதி வரையிலும் முகவர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 30,300 ஆன மொத்த நிதியில் 65.6 சதவீதம், அதாவது 72.14 மில்லியல் அமெரிக்க டொலர்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு இயலாமையின் காரணத்தினால் கண்டி பல்வகை போக்குவரத்து முனையம் **(KMTT)** நிர்மாணிப்பதற்காக | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நிலவுகின்ற நிலைமைகள் நிதி பயன்பாடு குறைவதற்கு காரமாகியுள்ளது. | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை உயர் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்த 65 மில்லியன் ஐ.அ. டொலர்கள் மற்றும் 27 மில்லியன் ஐ.அ.டொலர்கள் உள்ளடங்கலாக 92 மில்லியன் ஐ.அ. டொலர்கள் 2021 திசெம்பர் 31 இல் இரத்து செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நலன் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஔ) மேற்படி செயற்திட்டத்தின் கீழ் கண்டி தர்மாஷோக வீதியின் 3.39 கி.மீ இனை மறுசீரமைப்பு செய்து மேம்படுத்தும் ஒப்பந்தம் 2016 யூலை 07 ஆந் திகதி ரூபா 796.4 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தம் 2018 யூலை 07 ஆந் திகதி பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் அப் ஒப்பந்தம் 2019 யூன் 14 ஆம் திகதி இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், அது வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 405.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முறையே ரூபா 355.57 மில்லியன் மற்றும் ரூபா 156.62 மில்லியனிற்கு வேறு இரு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இந்த செயற்பாட்டின் இறுதி முழுமையான பெறுமதி ரூபா 917.93 மில்லியனாக காணப்பட்டது. எனவே, ஒப்பந்தத்தினை இடைநடுவே நிறுத்தியமையின் காரணத்தினால் செயற்திட்டத்திற்கு மேலதிகமாக ரூபா 121.5 மில்லியன் செலவீனமொன்று ஏற்பதற்கு நேர்ந்திருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நோக்கங்கள் அடையப்படுவதற்கு நிலையான மற்றும் பயனுள்ள ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |
| மேற்படி செயற்திட்டத்தின் 4250 மீட்டர் காலி மொரகொட பிரதான கால்வாய் மற்றும் விகாரை பக்க கால்வாய் மறுசீரமைக்கும் ஒப்பந்தம் 2017 மார்ச் 06 ஆந் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 844.9 மில்லியனாகும். இது 2019 செப்தொம்பர் 07 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2019 ஏப்ரல் 11 ஆந் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முழுமையான காலவரையறை 900 நாட்களென இலக்கமிடப்பட்டிருந்த போதிலும் 780 நாட்களுக்குள் நிறைவு செய்யப்பட்டிருந்த வேலையளவு 20% ஆக காணப்பட்டதுடன் அதற்கான கிரயம் ரூபா 329.1 மில்லியனாக காணப்பட்டது. கால்வாயின் வேலை நிறைவு செய்யப்படாத மொத்த தூரத்தில் 1,850 மீட்டர் மட்டும் மறுசீரமைப்பதற்காக ரூபா 462.62 மில்லியன் உள்ளடங்கலாக மொத்த செலவீனம் ரூபா 736.03 மில்லியனாகும். அதன் பிரகாரம் கால்வாயின் மொத்த தூரம் ஒப்பந்த வேைல பூர்த்தி செய்யப்படாதமையினால் அதன் முழுமையான நலன் பொது மக்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. எனினும் பிரதான கால்வாயின் முழுமையான நீளத்திற்காக காணி கையகப்படுத்துவதற்கு ஏற்கப்பட்ட கிரயம் ரூபா 397.6 மில்லியனாக காணப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | பயனுள்ள செயற்திட்ட முகாமைத்துவ அமைப்பொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஃ) | காலி நகர சபையின் களஞ்சியம் மற்றும் அதனுடனான வசதிகள் நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2019 ஏப்ரல் 24 ஆந் திகதி ரூபா 135.65 மில்லியன் பெறுமதிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. நிர்மாணிப்பு காலம் 270 நாட்களாக காணப்பட்டதுடன் 113 நாட்கள் நீடிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 23 தொடக்கம் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அத் திகதிக்கு செயன்முன்னேற்றம் 90 % மட்டுமாகும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நோக்கங்கள் அடைந்துக் கொள்வதற்கு வினைத்திறனான மற்றும் பயனுறுதிமிக்க செயற்திட்ட முகாமைத்துவ அமைப்பொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (க) | அநுராதபுர ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடன் வசதி ஒப்பந்தத்தின் பிரகாரம், ரூபா 6,562.68 மில்லியன் பெறுமதியான 12 தொகுப்புக்களின் பெறுகை செயன்முறைகள் 2021 ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மதியுரை பணியின் விரிவான பொறியியல் திட்டம் தாமதித்தமையின் காரணத்தினால் ரூபா 5,925.19 பெறுமதியான 08 தொகுப்புக்களின் பெறுகை செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, கடன் வசதி 2023 செப்தெம்பர் 30 வரை நீட்டிப்பதற்கு நேர்ந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நோக்கங்கள் அடைந்துக் கொள்வதற்கு வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவ அமைப்பொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ங) | மேற்படி செயற்திட்டத்தின் அநுராதபுர பல்வகை போக்குவரத்து மத்திய நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தக்காரரினால் தயாரித்திருந்த பொறியியலாளர் மதிப்பீடு 2021 நவம்பர் 03 ஆந் திகதி ரூபா 920.44 மில்லியனாக காணப்பட்டதுடன், அதற்காக ஒப்பந்தக்காரரினால் 2021 ஒக்தோபர் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,176.12 மில்லியனாக காணப்பட்டது. அது பொறியியல் மதிப்பீட்டினை பார்க்கிலும் 30.2% அதிகமாக காணப்பட்டது. பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் ஒப்பந்த விவரக்குறிப்புக்களுடன் விகித பகுப்பாய்வு செய்யப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின் விவரக்குறிப்பின் எதிர் பெறுமான வீச்சு 1-93% சதவீதத்தினுள்ளும் விவரக்குறிப்பு மிகை மதிப்பீடுகளின் வீச்சு 1-4483% இடையேயாகவும் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மதியுரை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு திருத்துமாறு பின்னர் அமைச்சின் பெறுகைகள் குழுவினால் கோரப்பட்டிருந்தது. அத் திருத்தப்பட்ட மதிப்பீடு 2021/12/17 இல் ரூபா 1,110.51 மில்லியனாகும். அதன் போது வேறுபாடு 6.2% சதவீம் மட்டுமாக காணப்பட்டது. | பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ச) | மேலும் மேற்படி செயற்திட்டத்தின் கடன் வசதி ஒப்பந்தத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஊடாக ரூபா 6,562.68 மில்லியன் பெறுமதியான 12 தொகுப்புக்களின் பெறுகை செயன்முறைகள் 2021 ஆம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், மதியுரையாளர்களின் விரிவான பொறியியல் திட்டங்களின் தாமதித்தமையினால் ரூபா 5,925.19 பெறுமதியான 08 தொகுப்புக்களின் பெறுகை செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, கடன் வசதி 2023 செப்தெம்பர் 30 வரை நீட்டிப்பதற்கு நேர்ந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நோக்கங்கள் அடைந்துக் கொள்வதற்கு வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவ அமைப்பொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஞ)** | அதற்கு மேலதிகமாக, மேற்படி செயற்திட்டம் விரிவான வடிவமைப்பு ஆய்வு மதியுரை சேவை பெறுகைக்காக ரூபா 212.66 மில்லியனிற்கு (1.18 யூரோ மில்லியன்) 2017 ஆகஸ்ட் 29 ஆம் திகதி SCE, Group hit – Green Tech Consultants கூட்டு வியாபாரத்துடன் ஒப்பந்தமொன்றில் உடன்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம், மதியுரையாளருக்கு 2019 மே 12 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்ட மதியுரை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் அத் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அதன் பின்னர் நான்கு தடவைகள் திருத்தப்பட்டிருந்ததுடன் கால நீட்டிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், 18 அறிக்கைகள் உரிய திகதிகளில் சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் உரிய திகதியில் 17 அறிக்கை சமர்ப்பித்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ஒப்பந்தத்தின் 46.2 இன் பிரகாரம், உரிய காலத்தில் அறிக்கையொன்று சமர்ப்பிக்காமையின் காரணத்தினால், ரூபா 59,301,465 மில்லியன் அந் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதுடன், அத் தொகை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்காக உறுதியான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |
| **(ட)** | மேற்படி அநுராதபுர ஒருங்கிணைப்பு நகர அபிபிருத்தி செயற்திட்டத்திற்கு தொடர்புடையதாக 2018 ஏப்ரல் மாதத்தில், கழிவு நீர் முகாமைத்துவ கூறுக்காக சாத்தியவள ஆய்வொன்றாக 04 அறிக்கைகள் முன்வைத்தல் மேலதிக மதியுரை பணியாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த மேலதிக பணியின் காரணத்தினால் ஒப்பந்தத்தின் பெறுமதி 106,080 யூரோ மற்றும் ரூபா 89,622,500 மில்லியன் + PS50M வரை மொத்தம் ரூபா 149.63 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம், மதியுரையாளரினால் அநுராதபுர நகரத்தில் கழிவு நீர் முகாமைத்துவ அமைப்பிற்கான இறுதி சாத்தியவள அறிக்கை 2020 யூலை 24 ஆம் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், இது வரையில் அவ் அறிக்கைக்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ண)** | மேலும் அச் செயற்திட்டத்தின் கீழ் ரயில்வே ப்லாசா மற்றும் சிங்க கம்ப சுற்றுவட்டம் மறுசீரமைப்பு செய்வதற்காக ஒப்பந்தக்காரருக்கு 2020 யூலை 06 ஆந் திகதி ரூபா 122.62 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது 2021 யூலை 21 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்பந்தக் காலம் 2022 மார்ச் 14 ஆந் திகதி வரை 310 நாட்கள் வரை 3 தடவைகள் நீட்டிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரையில் ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 23.79 மில்லியனாக காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு பௌதீக செயன் முன்னேற்றம் 10 சதவீதம் மட்டுமாகும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.<br><br>நாட்டில் நிலவும் நிலைமையினால் ஆகும். | வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்றினை செயல்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்பொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர குடியிருப்பு அதிகார சபையினால் வரையறுக்கப்பட்ட ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (தனியார்) கம்பனியை கையேற்கும் போது ஏற்பட்டிருந்த நிதி மோசடிக்கு தொடர்புடையதாக சட்டமா அதிபரினால் 2021 ஒக்தோபர் 28 ஆந் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் நட்டம் தொடர்பாக குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்று கருதப்படுவதற்கு நிதி பிரமாணம் 103 (11 ஆம் அதிகாரம்) கீழ் குறித்த வரிசை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் அதிகார சபை சொந்தமான வரிசை அமைச்சான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் அது தொடர்பாக 2022 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | வரிசை அமைச்சின் தலையீட்டின் அடிப்படையில் இதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |